முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்
மாதிரி வினாத்தாள்-2

11th Standard

**கணக்குப்பதிவியல்**

Reg.No. :

# I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 00:45:00 Hrs | Total Marks : 35

பகுதி-அ 2 x 2 = 4

1) 'வங்கி மேல்வரைப் பற்று'-குறிப்பு வரைக.

2) வங்கி சரிக்கட்டும் பட்டியலின் தேவை யாது?

பகுதி-ஆ 2 x 3 = 6

3) ரொக்க ஏடு மற்றும் செல்லேட்டின் இருப்புகள் வேறுபட்டு இருப்பதற்கான காரணங்களைக் கூறுக.

4) வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

பகுதி-இ 5 x 5 = 25

5) 31-12-2003ற்கான கீழ்கண்ட தகவல்களிலிருந்து திரு. கௌதம் அவர்களின் வங்கி சரிக்கட்டும் பேட்டியளித்த தயாரிக்கவும்.

அ. ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.12,500

ஆ. அளித்த காசோலைகளில் இதுவரை செலுத்துகைக்கு முன்நிறுத்தப்படாதவை ரூ.900

இ. வங்கியில் செலுத்திய காசோலைகளில் வசூலித்து வரவுவைக்கப்படாதவை ரூ.1200

ஈ. வங்கி செலுத்திய காப்பீட்டுக் கட்டணம் ரூ.500

உ. வாடிக்கையாளர் நேரடியாக வங்கிக்கு செலுத்தியது ரூ.800

ஊ. வங்கி வசூலித்த முதலீடு மீதான வட்டி ரூ.200

எ. வங்கிக் கட்டணம் ரூ.100

6) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து, 2003 மார்ச் 31ல் திரு. முத்து அவர்களின் ரொக்க ஏடு உணர்த்தும் வங்கியிருப்பை கண்டுபிடி.

அ. 31-3-2003ல் செல்லேட்டின் வரவிருப்பு ரூ. 2,500

ஆ. வங்கிக் கட்டணம் ரூ.60 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை

இ. ஏற்கனவே ரூ. 3,500க்கு செலுத்திய காசோலைகளில், ரூ.1000ற்கான காசோலை இன்னும் வங்கியாளரால் வரவு வைக்கப்படவில்லை.

ஈ. ஏற்கனவே ரூ.4,500க்குச் செலுத்திய காசோலைகளில் ரூ.3,800க்கான காசோலைகள் தன வங்கியில் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

உ. வங்கியாளர் நேரடியாக கசூலித்த பங்காதாயம் ரூ.400 இன்னும் ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

ஊ. 31-3-2003 முன்னர் காசோலை அவமதிப்பட்டது. ரூ.600 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

7) திரு. மணிகண்டன் அவர்களின் பின்வரும் விவரங்களைக் கொண்டு, 2003 மார்ச் 31க்கு வங்கி சரிக்கட்டும் பட்டியலைத் தயாரிக்கவும்.

அ. பின்வரும் காசோலைகள் மார்ச் மாதத்தில் நிறுமத்தின் நடப்புக் கணக்கில் செலுத்தப்பட்டாலும், வாங்கி ஏப்ரலில் வரவு செய்தது அன்பு ரூ.250, பாலு ரூ.350 மற்றும் சந்துரு ரூ.190.

ஆ. பின்வரும் காசோலைகள் மார்ச் மாதத்தில் விடுவிக்கப்பட்டது மற்றும் ஏப்ரல் மாதத்தில் பணமாக்கப்பட்டது. இளவரசன் ரூ.250, ராணி ரூ.450 மற்றும் ராஜா ரூ.400.

இ. வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட ரூ.100க்கான காசோலை மார்ச் மாதத்தில் ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியில் பதிவு செய்யப்பட்டது. ஆனால் ஏப்ரல் மாதத்தில் தான் வங்கியில் செலுத்தப்பட்டது.

ஈ. வங்கிச் செல்லேடானது வட்டிக்கான வரவாக ரூ.250ஐயும் வங்கிக் கட்டணத்திற்காக பற்றாக ரூ.100ஐயும் காட்டியது.

உ. 31.3.2003ற்கான ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.18,000

8) பின்வரும் விவரங்களைக் கொண்டு, 31 டிசம்பர் 2003ற்கான காட்டன் உலகம் வரையறுக்கப்பட்டதன் வங்கி செல்லேட்டில் காணக்கூடிய இருப்பினைக் கணக்கிடவும்.

அ. 31 டிசம்பர் 2003 ரொக்க ஏட்டின்படி வங்கி மேல்வரைப்பற்று ரூ.1,26,800.

ஆ. 31 டிசம்பரில் முடியும் 6 மாதத்திற்கான மேல் வரைப்பற்று மீதான வட்டி ரூ.3,200 செல்லேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இ. வங்கிக் கட்டணம் ரூ.600 செல்லேட்டில் பதியப்பட்டுள்ளது.

ஈ. ரூ.23,360 மதிப்பு கொண்ட காசோலை விடுக்கப்பட்டும் டிசம்பர் 31 வரை பணமாக்கப்படவில்லை.

உ. ரூ.43,400 மதிப்புள்ள காசோலைகள் வங்கியில் செலுத்தப்பட்டு, இன்னும் வசூலாகவில்லை.

ஊ. வங்கி வசூலித்த முதலீடுகள் மீதான வட்டி ரூ.24,000 வரவு வைக்கப்பட்டுள்ளது.

9) திரு. இளவரசனின் ரொக்க ஏடு ரூ.8,000 வங்கி மேல்வரைப்பற்றிருப்பை 31 அக்டோபர் 2003ல் காட்டியது. ரொக்க ஏட்டையும் வங்கி செல்லேட்டையும் ஒப்பு நோக்கும் போது, பின்வருபவை தெரிய வந்தன.

அ. வங்கியில் செலுத்திய ரூ.1,400க்கான காசோலை 31 அக்டோபர் வரை வசூலாகவில்லை.

ஆ. விடுத்த கசோலிகளில் ரூ.720 அக்டோபர் 31 வரை செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இ. வங்கியால் பதிவு செய்த மேல்வரைப் பற்று மீதான வட்டி ரூ.110 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

ஈ. செப்டம்பர் 1ல் தள்ளுபடி செய்த ரூ.800 மதிப்புள்ள பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்கு பணம் மறுக்கப்பட்டது.

உ. வாடிக்கையாளர் வங்கியில் நேரடியாக செலுத்தியது ரூ.45க்கு ரொக்க ஏட்டில் பதிவு இல்லை.

31-03-2003ல் வங்கி சரிகட்டும் பட்டியலை தயாரிக்கவும்

****************************************